தமிழ் இலக்கிய நயம்

# வாய்மொழிப்பாடல்

## அலகு– 03

## தரம்–10




திருமதி – க. சுகந்தி

கே /தெஹி/ தெஹியோவிட்ட த. ம. வி

தெஹியோவிட்ட.

## நாட்டார் பாடல் என்பது

நாட்டுப்புற மக்களால் பாடப்பட்டு எழுதப்படாதது பரம்பரை பரம்பரையாக செவிவழியாக பேணப்பட்டு வந்த பாடல்கள் நாட்டார் பாடல் என்போம்.

## நாட்டார் பாடலின் மறுபெயர்கள்

- வாய்மொழிப் பாடல்
- நாட்டுப்புறப் பாடல்கள்
- நாடோடி பாடல்கள்

கிராமிய பாடல்கள்

பாமரப் பாடல்கள்

## நாட்டார் பாடல்களின் பாடுபொருள்

நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையையும் அந்த வாழ்க்கையின் இன்ப துன்பங்களையும் இவை பாடுபொருளாகக் கொண்டு உள்ளன.

## நாட்டார் பாடல்களின் சிறப்புகள்

தொன்மையானவை அதாவது காலவரையறை இல்லாதவை இலக்கியச் செழுமை உடையவை

## நாட்டார் பாடல்களின் தோற்றுவாய்

இலக்கியம் என்பதை பண்டைய தமிழர் செய்யுள் அல்லது நூல் என்பர்

சங்க இலக்கியங்கள்

காவியங்கள்

பிரபந்தங்கள் இவை எல்லாம் செயல்களான நூல்கள் இவை கற்றல் புனையப்பட்டவை கற்றோருக்கே உரியவை

**படித்தவர்களும் பாமரர்களும் இன்புறும் வகையில் அமைந்தவை நாட்டார் பாடல்கள்.**

உழைக்கும் மக்கள் தங்கள் தங்கள் கடும் உழைப்புகளை உல்லாசமாக புரிந்து கொள்ள **தெம்மாங்குகளை** பாடினர்

“ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது” “ஆட்டமும் பாட்டமும் இசையோடு நிகழ்ந்தன” இசைப்பாடல்கள் தோன்றின.

## தொழிலை அடிப்படையாகக் கொண்ட பாடல்கள்

- சூடு மிதித்தல்
- வண்டி ஓட்டுதல்
- உழுதல்
- களை பிடுங்குதல்
- மீனவர் பாடல்

ஏற்றம் இறைத்தல்
படகோட்டுதல்
விதைத்தல்
உப்பட்டி கட்டுதல்
அருவிவெட்டுதல்



## நாட்டார் பாடல்களின் வகைகள்

- விளையாட்டு பாடல்கள்
- தாலாட்டு பாடல்கள்
- ஒப்பாரிப் பாடல்கள்
- கவிதைகள்
- கவிகள்
- கப்பற் பாடல்கள்
- மருத்துவிச்சி பாடல்கள்

ஊஞ்சல் பாடல்கள்
கும்மி பாடல்கள்
கதைகள்
விடுகதைகள்
பழமொழிகள்
நலுங்குப் பாடல்கள்

## நாட்டார் இலக்கியங்களால் நாம் அடையும் நன்மைகள்

- மக்களின் கலைகள் பண்பாடு பாரம்பரியம் என்பவற்றை புலப்படுத்தி மக்கள் வரலாற்றை அறிய உதவுகின்றது
- மக்களின் பழக்கவழக்கங்களை புலப்படுத்துகின்றன
- மக்கள் அனுபவித்த இன்ப துன்பங்களை எடுத்துக்காட்டுகின்றன
- இல்லற வாழ்க்கையையும் அரசியல் வாழ்க்கையையும் எடுத்து இயம்புகின்றன
- பல்வேறு வகை நம்பிக்கைகளை நாம் அறிய உதவுகின்றன
- ஓய்வு நேரங்களில் மக்கள் அனுபவித்த இன்ப வாழ்க்கையை எடுத்தியம்புகின்றன
- ஆடிப்பாடி விளையாடிய ஆட்டங்களை நமக்கு உணர்த்துகின்றன
- மக்களின் தொன்மையான நாகரிகத்தையும் அது வளர்ந்த வரலாற்றையும் உரைக்கின்றன

## மருத்துவிச்சி பாடல் என்பது

- வாய்மொழிப் பாடல்களின் ஒரு கிளையாகும்
- வைத்தியர்களும் வைத்தியசாலைகளில் செல்வாக்கு பெற்றிராத கிராமங்களில் மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வாள்
- தாயையும் குழந்தையையும் பாதுகாத்து அவளுக்கு அரிசி, நெல், மிளகு முதலான பொருட்கள் வழங்கப்படுவது உண்டு
- பிரசவம் பார்த்த மருத்துவர் குழந்தையைக் கைகளில் தூக்கியவாறு பாடப்படும் பாடல்களாக அமைவது ஆகும்.



1. **மருத்துவிச்சி வாழ்த்து என்பதன் கருத்து யாது?**

குழந்தை பிறப்பதற்காக பிரசவம் பார்க்கும் மருத்துவிச்சி அக் குழந்தையை தன் கைகளில் தூக்கி அதனை வாழ்த்திப் பாடும் பாடல் இதுவாகும்.

2. **மருத்துவிச்சியின் பரந்த மனப்பாங்கு**

இப் பாடல் வாயிலாக மருத்துவிச்சியின் பரந்த மனப்பாங்கு பின்வருமாறு வெளிப்படுகின்றது.

- குழந்தையை வாழ்த்திப் பாடும் போது குழந்தையின் தாய் தந்தையர் மற்றும் உறவினர்களை கூறி அவர்களை வாழ்த்துதல்
- மேலும் குழந்தையின் சுற்றத்தவர்களும், அயலவர்களும் வாழவேண்டும் எனப் பாடுதல்
- குழந்தையை உறவு முறை கூறி அழைப்பதன் ஊடாக மருத்துவிச்சியின் பரந்த மனப்பாங்கு வெளிப்படுகின்றது.
- குழந்தை நல்ல முறையில் வளர வேண்டும் என வாழ்த்திப் பாடுதல்

**அயலும் புடையும் வாழ வேண்டும்**

**அன்னமும் சுற்றமும் வாழவேண்டும்**

**ஆச்சியும் அப்புவும் வாழவேண்டும்**

**அம்மானும் மாமியும் வாழவேண்டும்**

3. **குழந்தை எவ்வாறெல்லாம் வாழ வேண்டும் என மருத்துவிச்சி விரும்புகின்றாள்**

- மன்னர்களுக்கெல்லாம் மன்னனாக குழந்தையானது வாழ வேண்டும் எனல்.
- மன்னர்க்குரிய மணி முடியும் பெற்று வாழ வேண்டும் கூறுதல்
  **வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோ தம்பி**
  **வேந்தர் மணிமுடியும் கண்டீரோ தம்பி**
- கல்வி போதிக்கும் குருவுக்கு நல்ல பிள்ளையாக வாழ வேண்டும் எனக் கூறுதல்
- கடவுளுக்கும் நல்ல பிள்ளையாக இருந்து வளர வேண்டும் எனப் பாடுதல்





**ஊர்வாழ தேசம் வாழ**

**குருவுக்கும் சிவனுக்கும்**

**நல்ல பிள்ளையாய் இருந்து வாழ்க**

**4. இப் பாடலில் கிராமிய மண் வாசனை**

- கிராமம் ஒன்றின் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்கள் பாடப்பட்டிருத்தல்.



"பெற்றோருக்கு அடுத்தப்படியபக மங்கல நிகழ்வுகளில் முக்கியதுவம் பெறுபவர்கள் மாமனும் மாமியும் என்ற கருத்துமுன் வைக்கப்படுகிறது".

**அம்மானும் மாமியும் வாழவேண்டும்....**

- கிராமத்தில் வாழ்பவர்கள் ஒற்றுமை கொண்டவர்களாக உறவு முறையில் பிணைப்புக் கொண்டவர்களாக வாழுதல்
- பல உறவுமுறைகள் கூறி அழைக்கும் தன்மை காட்டப்படுதல்
  உ.ம் - அப்பு, ஆச்சி, மாமன், மாமி, கொப்பா்
- பிரசவம் பார்ப்பவர்க்கு பரிசுப் பொருட்கள் கொடுத்தல்
  உ.ம் - உள்ளி, நெல், அரிசி, மஞ்சள்
- குருவையும், இறைவனையும் மதிக்கின்ற, போற்றுகின்ற தன்மை காணப்படல்



**அரிசி பொதியோடும் வந்தீரோ தம்பி**

**அரிசி மலைநாடும் கண்டீரோ தம்பி**

**நெல்லுப் பொதியோடும் வந்தீரோ தம்பி**

**நெல்லு மலைநாடும் கண்டீரோ தம்பி**

வினாக்கள்

1. மருத்துவிச்சியின் மனப்பாங்கு பற்றிய உமது கருத்தினை முன்வைக்குக.
2. குழந்தை எவ்வாறெல்லாம் வாழ வேண்டும் என மருத்துவிச்சி விரும்புகிறாள்
3. இப்பாடலில் கிராமிய மண்வாசைன வெளிப்படுமாற்றை தெளிவுறுத்துக
4. இப்பாடல் பகுதியில் வெளிப்படும் அழகியல் உணர்வினை எடுத்துக்காட்டுக